DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.9/2024**

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 06- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | தனியார்வேலை |
| பெயர் | - | பபிதா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | ரகுநாத் | சமயம் | - | |
| கிராமம் | - | வாட்டர்பால் எஸ்டேட் | வயது | - | 29/2025 |
| சாதி | - | | | | |

**<u>06-10-2025</u>**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)
( அ.சா.1-னிடம் மூடிய நீதிமன்றம் (In camera Proceedings) நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு வாய்ப்பளித்தும், அவர் திறந்த நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதாக கூறினார்.)

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, கோயம்புத்தூர் அமேசான் நிறுவனத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பாக வாட்டர்பால்ஸ் எஸ்டேட்டில் பள்ளியில் வேலை இருப்பதாக எனது தோழி சொன்னதின் பேரில் நான் வாட்டர்பால்ஸ் உயர் நிலைப்பள்ளியில் வேலை சம்பந்தமாக விசாரித்தேன். அங்கு பள்ளி தலைமை ஆசிரியரை பார்த்து அவர் என்னை விசாரித்து பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு ( Escort ) பாதுகாவலராக பணியில் என்னை சேர்த்தார். பள்ளி குழந்தைகளை ARC என்ற இடத்திலிருந்து பள்ளிக்கு அழைத்து வந்து, மாலை பள்ளியிலிருந்து குழந்தைகளை ARC-க்கு அழைத்து செல்லுவது என் பணி ஆகும். நான் படித்திருந்ததால் என்னை கணிணி இயக்குவதற்கும் பணி அமர்த்தினார்கள். கடந்த 20.03.2023-ம் தேதி காலை 11.00 மணியளவில் நான் பள்ளி அலுவலக அறையில் இருந்த போது, 10-ம் வகுப்பிற்கு Revision பரிட்சை நடைபெற்று கொண்டிருந்தது. அதற்கு கேள்வித்தாள்களை பிரிண்ட் எடுக்க ஆங்கில ஆசிரியர் தேவி என்பவர் கூறினார். தேவி ஆசிரியர் அறைக்கு வெளியே அமர்ந்திருந்தார். நான் பிரிண்ட் எடுத்துக்கொண்டிருந்தேன். தேவி ஆசிரியர் தான் வகுப்பிற்கு செல்லுவதாகவும், என்னை பிரிண்ட் எடுத்து கொண்டு வந்து கொடுக்குமாறு கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். பின்னர் ஆசிரியர் தேவி சென்ற பிறகு தலைமை ஆசிரியர் குலசேகரன் அறைக்குள் வந்தார். ( அவரை பார்த்தால் அடையாளம் சொல்ல இயலும்.) நான் கேள்வித்தாள்களை பிரிண்ட் செய்து கொண்டிருந்தேன். நான் கணிணி முன்பு நின்று கணிணியை பார்த்தவாரு பிரிண்ட் எடுத்துக்கொண்டிருந்தேன். அப்போது குலசேகரன் என்ன நினைத்தார் என்று தெரியவில்லை. எனக்கு பின்புறமாக வந்து Misbehave செய்தார். என்னை பின்னாலிருந்து கட்டிப்பிடித்தார். எனக்கு முத்தம் கொடுக்க முயற்சி செய்தார். நான் அவரை அடித்து கீழே தள்ளிவிட்டேன். அவரை

கன்னத்தில் அடித்து, எட்டி மித்தேன். சுவற்றில் தள்ளிவிட்டேன். நான் அழுது கொண்டே அறையை விட்டு வெளியே வந்துவிட்டேன். என் அம்மா மல்லிகாவை வர சொல்லி அம்மா வந்தவுடன் காடம்பாறை காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். சம்பவத்தின் போது யாரும் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. புகார் மனுவை நானே எழுதினேன். **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரிலிருந்து குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.